[27th April 1959

SRI A. VEDARATHNAM : கடலை உற்பத்தி செய்கிறவர்களும் விவசாயிகள், நெல் உற்பத்தி செய்கிறவர்களும் விவசாயிகள் என்றாலும் இந்த இரண்டு பேர்களிலும் யாருக்கு சர்க்கார் சலுகை கொடுப்பது அவசியம் என்று கருதுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சலுகை கொடுப்பது என்றால் அவரவர்களுக்கு ஏற்றவாறு இரண்டு சாரார்களுக்கும் தான் கொடுக்கவேண்டும்.

Manavari paddy cultivation

* 175 Q.—SRI A. VEDARATHNAM (on behalf of Sri K. R. NALLASIVAM) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்திலுள்ள சர்க்கார் விவசாயப் பண்ணைகளில் மானாவாரி நெல் சாகுபடி முறை பரீட்சிக்கப்படுகிறதா ?

(ஆ) அப்படியானால், ஏக்கருக்கு சாராசரி எத்தனை பவுண்ட் விளைகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The answer is in the affirmative.

(*b*) During the year 1958–59, an average yield of 935 lb. of paddy per acre was obtained at the Paddy Breeding Station, Coimbatore, and 624 lb. per acre at the Rice Research Station, Tirurkuppam.

SRI A. VEDARATHNAM : மானாவாரி நஞ்சைக்கு எந்த ரக விதை நல்லது என்று விவசாய இலாகா தீர்மானித்திருக்கிறது ? அந்த ரக விதையை அதிகம் உற்பத்தி செய்து விநியோகிக்க சர்க்கார் எடுத்திருக்கும்படியான நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது 25 ரக விதைகள் பொருக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் மேலும் ஆராய்ச்சி செய்து கொண்டு வருகிறார்கள். மேலும் எந்த விதை சிறந்தது என்பது ஆராய்ச்சியின் முடிவில் தெரியும்.

SRI V. SUBBIAH : மானாவாரி மேட்டுப் பிரதேசத்தில் மழை குறைவாக, தண்ணீர் குறைவாக உள்ள ஒரு இடத்தில் ஏதோ ஒரு ரக விதை சிறந்ததாக இருக்கிறது என்று சொல்லப்பட்டதே ? அது பரீட்சார்த்தமாக எப்படி இருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி ஒரு தனிக் கேள்வி போடவேண்டும்.

Scholarships to Harijan students.

*176 Q.—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ல் சென்னை ராஜ்ஜியத்திலிருக்கும் ஹரிஜன மாணவர்கள் மாணவிகளுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுவதற்காக மத்திய சர்க்காரால் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) அத்தொகையானது எந்தத் தேதியிலே சென்னை சர்க்காருக்குக் கிடைத்தது ?

27th April 1959]

(இ) எந்த மாதத்திலே, இத்தொகையானது ஹரிஜன மாணவர் களுக்கும மாணவிகளுககும் வழங்கப்பட்டன ?

THE HON. SRI P. KAKKAN : (a) A sum of Rs. 5,95,500 was allotted for grant of scholarships for Scheduled Castes under the Grant-in-aid schemes during 1958–59, of which the Central grant would be Rs. 2,97,750.

(b) The Government of India have released in the form of 'Ways and means' advances three-fourths of the allotment of Central Assistance for all the Plan schemes including the assistance for these schemes in nine monthly instalments commencing from the month of May 1958. The releases were made automatically on or about the 15th of each month and the last instalment was received on the 15th January 1959. The balance will be adjusted by the Accountant-General on receipt of final payment sanction from the Government of India during March 1959.

(c) A sum of Rs. 2,70,500 was spent up to 30th September 1958 by the Director of Harijan Welfare and Rs. 1,00,000 was distributed to the Collectors by the Director of Harijan Welfare. A sum of Rs. 25,000 was allotted to the Collector of Kanyakumari in November 1958. An additional sum of Rs. 2 lakhs sanctioned during March 1959, was spent during the month.

SRI P. G. MANICKAM : ஜூலை மாதத்திலே ஹரிஜன மாணவ மாணவிகள் விண்ணப்பித்துக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைப்பதற்கு வருஷக் கடைசி கூட ஆகிவிடுகிறது. ஆகவே இந்தத் தொகையை முன்னதாக ஆகஸ்ட்டு, செப்டம்பர் மாதங்களிலேயே அனுப்பு வதற்கு நமது சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ? அப்படி ஏதாவது சென்னை சர்க்காரிலிருந்து மத்திய சர்க்காருக்கு கோரிக்கை போயிருக்கிறதா? அதற்குக் கிடைத்த பதில் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : நானே எழுதி இருக்கிறேன். ஹரிஜன மந்திரி மகாநாட்டுக்குப் போயிருந்தபோதும் இவைப்பற்றி வற்புறுத்தி யிருக்கிறேன். சமீபத்தில் டைரெக்டர் ஒரு மாகாநாட்டுக்குப் போயிருந்த போதும் கூட இதை வற்புறுத்தியிருக்கிறார். ஆகவே இதை கவனித்து ஒரு நடவடிக்கை எடுப்பதாக மத்திய அரசாங்கத்தாரும் சொல்லியிருக்கி றார்கள்.

Co-operative Weavers' Societies in Paramakudi taluk

* 177 *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of co-operative weavers' societies in Paramakudi taluk, Ramanathapuram district;

(b) the number of active looms working in such societies,

(c) whether there is any proposal to construct houses for weavers at Paramakudi town; and

(d) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Five societies.